<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:-திரு.கே.கமலநாதன்,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
(கூடுதல் பொறுப்பு)
சிதம்பரம்.

2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ம் நாள் புதன்கிழமை

<u>*இ.ம.எண். 207/2021 in இ.ம.எண். 241/2020 in அசல் வழக்கு எண்: 119/2020*</u>

S.P. திலகவதி ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. தனம்மாள்
2. S.P. சரவணன் (இறந்துவிட்டார்)
3. சங்கமித்திரை
4. சுதா நந்தினி
5. சுதர்ஷன்

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பா.சரவணன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.பி.டி.ஜானகி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 8 மற்றும் விதி 9 மற்றும் உடனிணைந்த பிரிவு 151-ன் கீழ் மனுதாரர்கள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்துள்ள பதில் எதிருரையை அசல் வழக்கில் ஏற்று கொண்டு அசல் வழக்கை மேல்உத்தரவு செய்யவேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:</u>

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும் இந்த எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும் அசல் வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரததிற்காக தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் இடைமனு 241-2020 என்ற மனுவை இடைக்கால தடை உத்தரவு கோரி மனு கொடுத்துள்ளதாகவும், அதில் இந்த எதிர்மனுதாரர்கள் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளதாகவும், உண்மைக்கு மாறான பல விபரங்களை மறுத்தும் உண்மை விபரங்களை தெரிவித்து பதிலுரை தாக்கல் செய்ய வேண்டியுள்ளதாகவும், மேலும் எதிர்மனுதாரர் கூறும் உண்மைக்கு மாறான விபரங்களுக்கு தனது தரப்பு ஆவணங்கள்

மூலம் கூடுதல விபரங்களை தெரிவிக்க வேண்டியுள்ளது என்றும் எனவே அசல் வழக்கில் இந்த மனுவுடன் கொடுக்கும் பதிலுரையை ஏற்றுக்கொள்ள மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்:</u>

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு சரியல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கொடுத்த பதில் அறிவிப்பின் அம்சங்களை கொண்டே இந்த எதிர்மனுதாரர் உண்மையை எடுத்து கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருவதாகவும், புதிதாக எந்த கட்சியும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் மேலும் இந்த மனுதாரர் தரப்பில் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குக்கு முன்பு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு அம்சங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இம்மனு ஏற்புடையதல்ல என்றும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிலுரையை தெளிவுபடுத்த வேண்டியது மனுதாரரின் கடமையாகும் என்றும், எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.

5. <u>இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>

வாதி அசல் வழக்கை பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு முடியும் வரை மனுதாரர் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இடைமனு 241-2020 என்ற மனு தாக்கல் செய்து அதில் interim order பெற்றுள்ளதாகவும் இந்த நிலையில் அதில் இந்த எதிர்மனுதாரர்கள் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளதாகவும், உண்மைக்கு மாறான பல விபரங்களை மறுத்தும் உண்மை விபரங்களை தெரிவித்து பதிலுரை தாக்கல் செய்ய வேண்டியுள்ளதாகவும் அந்த பதிலுரையை ஏற்று உத்தரவு செய்ய மனுதாரர் இந்த இடைமனுவை தாக்கல் செய்துள்ளார். இடைமனு 241-2020ன் எதிருரையில் எதிர்மனுதாரரால் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் முற்றிலும், முரணானதாக உள்ளதாக மனுதாரர் கருதினால் மனுதாரர் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்வது என்பது வழக்கமான ஒன்றாகும். இம்மனுவிற்கு எதிர்மனுதாரர் ஆட்சேபனை செய்திருந்தாலும், பதிலுரையில் கூறப்பட்ட சங்கதிகள் உண்மையானதா இல்லையா என்பதை இடைமனு 241-2020 விசாரணை முடிவில் தெரியவரும். இம்மனுதாரர் தாக்கல் செய்த இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு பாதிப்பேதும்

இல்லை. இடைமனு 241-2020 விசாரணை ஆரம்பிக்காத நிலையில் இம்மனு தாக்கல் செய்திருப்பதால் இந்த இடைமனுவை அனுமதித்து, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் பதில் எதிருரையை ஏற்று இடைமனு 241-2020வை மேற்கொண்டு நடத்துவது என்பது தான் நீதிக்கு உகந்ததாக இருக்கும்.

இறுதியாக, மனுதாரர் தாக்கல் செய்த இந்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்ல சொல்ல அவரால் உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

K KAMALANATHAN

Digitally signed by K KAMALANATHAN
Date: 2022.11.30 11:43:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.(FAC)